**தலைப்பு 114 – போக்குவரத்து அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போக்குவரத்து அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 இலக்க அரச கணக்கீட்டு சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அசைவு அறிக்கை மற்றும் திறைசேரி கணினி அச்சுப் பிரதியின் படி பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள் மற்றும் கட்டிட நிர்மாணங்களின் ஆரம்ப மீதி ரூபா 2,929,603,168 மற்றும் அவற்றை கொள்வனவு செய்யும் போது ரூபா 2,487,609,734 வேறுபாடொன்று காணப்பட்டது. | திணைக்களப் புத்தகம் மற்றும் திறைசேரிப் புத்தகத்தின் படி வேறுபாடொன்று வெளிப்படுத்தப்படும் போது அந்த வேறுபாட்டிற்கான காரணத்தை பரீசீலித்து சரி செய்தல் இடம் பெற வேண்டும். | 2104 இன் செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நேரடி செலவினங்களின் பெறுமதியாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) காணிகளின் ஆரம்ப மீதி ரூபா 355,261,405 மற்றும் அவற்றை கொள்வனவு செய்தல் என்பவற்றில் ரூபா 679,014,041 இடையிலான வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - | |

**1.6.8 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் இலக்கம் 104(3) மற்றும் (4) | 2018 ஆம் வருடத்திற்கு உரிய 02 வாகன விபத்துக்களினதும் 2019 ஆம் வருடத்திற்கு உரிய 12 வாகன விபத்துக்களினதும் சேதங்கள் மற்றும் நட்டங்களை நிச்சயித்திருக்கவில்லை. | சேதங்கள் மற்றும் நட்டங்கள் அறிக்கைப்படுத்தப்பட்ட வுடனேயே பரிசீலனைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாகன விபத்து சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 126 மற்றும் 127 | சொத்துக்களை பாதுகாக்கும் பொறுப்பு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருப்பினும் ரூபா 3,500,000 பெறுமதியான விபத்திற்குள்ளான வாகனமொன்று நீண்ட காலமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | காப்புறுதி இழப்பீட்டின் மூலம் திருத்தங்களை மேற்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனத்துடன் கலந்துரையாடப்படுகின்ற தென்பதை அறியத்தருகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவின விடயம் 04 இற்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,600,000 மாற்றப்பட்டிருந்தும் அந்த முழு நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | பெறப்பட்ட நிதி ஏற்பாட்டை நிச்சயிக்கப்பட்ட விடயத்திற்காக ஈடுபடுத்துவதற்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 66 இன் ஊடாக பெறப்பட்ட நிதி ஏற்பாட்டினால் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டன. |
| (ஆ) | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது செலவுகள் சரியாக நிச்சயிக்கப்படாததன் காரணமாக மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 06 மூலதன செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாடு நூற்றுக்கு 72 இல் இருந்து நூற்றுக்கு 100 வரையான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்டப்டிருந்தது. | பெறபபட்ட நிதி ஏற்பாடுகளை உச்ச வினைத்திறனுடன் உட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்படுமாயின் அதை ஆக்க பூர்வமான விடயங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். | - மேற்படி - |

### 2.2. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய ரூபா 10,156,579 ஆன பொறுப்புக்கள் மீளாய்வாண்டிலே நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சாமல் பொறுப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். | CIGAS வேலைத் திட்டத்தில் காணப்படுகின்ற வரையறைகள் காரணமாக இது நிகழ்ந்துள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள காலதாமதங்கள்**

**(அ) குருநாகலை, தம்புள்ளையின் ஊடாக ஹபரண புகையிரத பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இந்த செயற்திட்டத்தின் 2019 ஆம் வருட இறுதியில் காணிகளை சுவீகரிக்கும் இலக்கு நூற்றிற்கு 17.1 ஆக இருப்பினும் முன்னேற்ற அறிக்கையின் படி அதன் முன்னேறற்ம் நூற்றிற்கு 10.4 ஆக காணப்பட்டது. இதன் படி இந்த செயற்திட்டத்தின் செயற்திறன் பலவீனமான நிலையில் காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதன் மூலமாக முன்னேற்றத்தை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சு, மற்றும் அமைச்சர்களின் பெயர்கள் மாற்றமடைவதனால் கோவைகள் மீண்டும் தயாரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்குட்படுத்தப்படுவதனால் குறிப்பிடத்தக்க தாமதம் இடம் பெற்றிருந்தது. |
| (ii) | இந்த செயற்திட்டத்திற்காக 2019 ஜுலை மாதத்திலிருந்து மாதத்திற்கு ரூபா 55,000 செலுத்துதல் என்ற இணகக்கப்பாட்டில் தனியாரிடமிருந்து வீடொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்ததுடன், பழைய அமைச்சின் கட்டிடமும் இந்த செயற்திட்டத்திற்காக இன்னுமொரு அலுவலகமும் செயற்படுத்தப்பட்டிருந்தது. | மாற்று சந்தர்ப்பங்களை கருத்திற் கொண்டு செலவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வாடகைக்கு பெறப்பட்ட வீடு கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு மற்றும் பொறியியலாளர் பதவி அணியினருக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |

## (ஆ) மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டம்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாத்தறை, தெவிநுவர, திக்வெல்ல, பெலிஅத்த மற்றும் தங்கல்லை ஆகிய பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக அரச மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டின் படி காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டுமெனினும், அதற்கு அனுகூலமாக நடவடிக்கைகள் இடம் பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் போது உரிய காணிகளை செயற்திட்டத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்கு இணங்காவிட்டால் இழப்பீடுகளை வழங்காமல் அந்த காணிகள் சுவீகரிக்கபடுமென உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன்படி காணி உரிமையாளர்களின் காணிகளை முதலில் இடை நடுவில் நபர்களினால் குறைந்த பெறுமதிக்கு சுவீகரித்த பின்னர் அவர்களிடமிருந்து கூடுதலான பெறுமதிக்கு நன்கொடையாக புகையிரத பொது முகாமையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது உரிய வரலாற்கு ஆவணங்களை பரிசீலிக்கும்போது அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக தேடிப்பார்த்தலை மேற்கொண்டு பிழையான தகவல்களை வழங்கியதன் மூலமாக காணிகளை சுவீகரித்துக்கொண்டவர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | புகையிரத திணைக்களத்தின் காணிகள் உத்தியோகத்தர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகளை ஈடுபடுத்தி உடனடியாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படும். |
| (ii) | இந்த செயற்திட்டத்தின் கீழ் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு முறையாக சுவீகரித்துக்கொண்ட காணிகளுக்கு மேலதிகமாக 62 சாட்டுதல் உறுத்துறுதியின் கீழ் மொத்தமாக ரூபா 57,580,854 ஆன 4 ஏக்கர் 31.37 பர்ச் அளவான காணிகள் இடை நடு | காணிகள் சுவீகரிக்கப்பட்டதற்கு ஏதுவான காரியங்களை ஒப்பந்தக்காரர்களின் மூலமாகவே நிறைவேற்றிக் கொள்வது துரிதப்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பான தகவல்கள் செயற்திட்ட அலுவலகத்தில் காணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அவை செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு பாவணைக்குட்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | | |
| (iii) | பெலிஅத்த புகையிரத நிலையத்திற்கு அண்மையில் செயற்திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் ஒரு சில பகுதிகள் மூன்று நபர்களினால் முறையற்ற விதத்தில் அனுபவிப்பதாக அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக புகையிரத பாதையை சரி செய்யும் ஆரம்ப திட்டத்தின்படி Buffer Line 05 தயாரித்தல் Buffer line 4 வரை குறைப்பதற்கு நேர்ந்துள்ளதுடன் முறையற்ற விதத்தில் அனுபவிக்கின்ற காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு புகையிரத திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையற்ற விதத்தில் குடியமர்ந்துள்ளவர்களிடமிருந்து அந்த காணிகளை மீண்டும் பெற்றுக்கொண்டு புகையிரத பாதையை அபிவிருத்தி செய்தல் மற்றும் உரிய நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முறையற்ற காணிகளை கைப்பற்றுதல் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iv) | கடன் உடன்படிக்கை நிபந்தனை 1-3 இன் பிரகாரம் கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட தினத்திலிருந்து 04 வருடத்திற்குள் கடன் பெறப்பட வேண்டும். கடன் உடன்படிக்கையானது 2013 ஏப்ரல் மாதம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் மாத இறுதியில் முழு கடன் தொகையும் பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும், நிர்மாணங்களின் கால தாமதங்களால் 2017 மே மாதத்திலிருந்து 2018 திசெம்பர் 31 வரையான கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 2,207.6 மில்லியன் தொகையான வெளிநாட்டு நாணயமாற்று நட்டமொன்று இடம் பெற்றிருந்தது. | நிர்மாணங்களின் கால தாமதங்களால் ஏற்படுகின்ற நாணயமாற்று நட்டத்தினை ஈடுசெய்ய முடியுமான வகையில் உடன்படிக்கை கைக்குட்படுத்தப்படுவதற்கு முன்னர் உரிய இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருக்க வேண்டும். | ஆரம்ப திட்டத்திற்கு சமிஞ்ஞை மற்றும் மின்சார கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் 2017 ஆம் வருடத்திலிருந்து செயற்திட்ட கால எல்லைகள் மாற்றப்பட்டிருந்தது. |

## (இ) கொழும்பை அண்மித்த புகையிரத செயற்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் சாத்திய வள ஆய்வு மற்றும் விரிவான நிர்மான தயாரிப்பிற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியத்தினால் செலுத்தப்பட்ட அறிவுரைக் கொடுப்பனவு சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கை மற்றும் செயற்திட்ட அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கைக்குமிடையில் ரூபா. 38,189,184 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட எண்ணிக்கை சரியாக இருக்க வேண்டுமென்பதுடன் வேறுபாடு காணப்படுமாயின் அதற்கான காரணம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். | வேலையை ஆரம்பிப்பதற்குகான முற்பணங்கள் (mobilization advance) அறவிடுதல் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ii) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆம் திகதிய (2019 மார்ச் 18 ஆம் திகதி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட) சுற்றுநிருபத்தின் முதலாம் பகுதியின் அட்டவணை இலக்கம் 01 இன் படி ஆரம்ப முதலீடு அமெரிக்க டொலர் 15 மில்லியனுக்கு குறைந்த செயற்திட்டத்திற்குரியதாக செயற்திட்ட பதவியணியினருக்கு சம்பளம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் 2018 மே 18 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்ததுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்க டொலர் 135 மில்லியன் செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிட்டுள்ள வரையறையின் அடிப்படையில் அதாவது அமெரிக்க டொலர் 100 | சுற்று நிருபத்திற்கு அனுகூலமாகும் வகையில் சம்பளங்கள் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது சம்பந்தமாக 2018 இறுதிக் கணக்கின் ஊடாக கேட்டறியப்பட்டிருந்ததுடன் இதற்காக நீண்ட கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளப்பட்டதுடன், கணக்காய்வின் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி கூறுவதாக அறியத்தரப்பட்டிருந்தாலும் அவ்வாறு இடம் பெறாததனால் எங்களால் வழங்கப்பட்ட விடையை கணக்காய்வில் ஏற்றுக்கொண்டதாக எங்களால் கருதப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் அடிப்படையில் உரிய சம்பளப்படியை உள்ளடக்கி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் கடன் முதலீடாக கருதி செயற்திட்ட பதவியணியினருக்கு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டிலே 38 பதவியணியினருக்காக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் ரூபா 12.89 மில்லியன் என அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னைய வருடத்தில் அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 449 மில்லியன் சம்பந்தமாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | ஆலோசனைச் சேவை உடன்படிக்கையின் இணைப்பு D யின் படி ஆலோசனை கம்பனியினால் நிச்சயித்துக் கூறப்பட்டுள்ள கால எல்லையின்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதன்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் இருப்பினும் மீளாய்வாண்டிலே ஆலோசனைக் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 390,220,493 தொகை மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அதன்படி இந்த கொடுப்பனவுகள் ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனையை மீறப்பட்ட செயலாக இன்னும் அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அனுகூலமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்தம் காலத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் 45.1 நிபந்தனையின் படி இடம் பெற்றது. எவ்வாறாயினும் வருடத்திற்குள் செலுத்தப்பட்ட ஆலோசனைச் சேவை கட்டணங்கள் சதவீதத்தை விஞ்சி சென்றிருக்கவில்லை. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு சொந்தமான 05 வாகனங்களை நீக்குவதற்கு பொருத்தமென பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த வாகனங்களை நீக்குவதற்கு | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 04 வாகனங்கள் போக்குவரத்து சபைக்கு மதிப்பீட்டுத் தொகையை செலுத்துதல் என்ற அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 02/2015 ஆம் இலக்க மற்றும் 2015 ஜூலை 10 ஆம் திகதிய அரச நிறுவனங்களின் உடைந்த வாகனங்களை பாவனையிலிருந்து நீக்குதல் என்ற தலைப்பில் நிதி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூபத்தின் 12 ஆவது பந்திக்கு உங்கள் கவனத்தை ஈடுபடுத்த விரும்புகின்றேன். | | வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்களை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.3 சேதம் மற்றும் நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் இடம் பெற்ற 19 வாகன விபத்துக்களில் 07 விபத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த விபத்துக்கள் சம்பந்தமாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டு நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 12 அவசர விபத்துக்களின் குறைபாடுகள் காணப்படுவதுடன் விசாரணைகளை முடிவுறுத்துவதற்கு முடியாதுள்ளது. |
| (ஆ) WP-KA 1279 இலக்க லேண்ட் குரூஸர் வகையான ஜீப் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி குருநாகல் சாரிகம பாதையில் விபத்துக்குள்ளாகியிருந்தது. இது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்ப விசாரணைகளை நடாத்தி இறுதி அறிக்கையை வெளியிட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | ஆரம்ப விசாரணைகள் இடம் பெற்றிருந்த போதிலும் உரிய வாகனம் திருத்தங்களை மேற்கொண்டு இல்லாததனால் விசாரணையை முடிவுறுத்த முடியாதுள்ளது. |

| | | |
|---|---|---|
| (இ) மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்ட வாகனம் சம்பந்தமான நட்டஈட்டு விண்ணப்பத்தினை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிராகரித்திருந்ததுடன் விபத்து இடம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் வாகனத்தை செலுத்திய சாரதி மது போதையில் இருந்ததாக அவரே ஒப்புக் கொண்டது இதற்கு ஏதவாக கூறப்பட்டுள்ளது. | இடம் பெற்ற நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | இந்த அவசர விபத்து சம்பந்தமாக நட்டஈடு வழங்குதல் நிராகிரிக்கப்பட்டிருந்தது. |

## 3.4 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) KE 8966 இலக்க மிட்சுபிசி வகையின் ஜீப் வாகனம் 2012 ஆம் வருடத்திலிருந்து நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய அமைச்சின் போக்குவரத்து அணியை பரீசீலிக்கும் போது அவதானிக்கப்பட்டது. அத்தோடு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற குருநாகலில் இருந்து ஹபரணை வரையான புகையிரத பாதை செயற்திட்டத்திற்காக 2018 மற்றும் 2019 வருடங்களிலே 03 வாகனங்களை வாடகைக்கு பெற்று பணம் செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சிற்குரிய வளங்களை வெளி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு முன்னர் அமைச்சின் தேவைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிலே பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கையின் படி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 23 உப அலகுகளின் 1,039 பொருட்களின் வகைகளுக்கு குறைபாடுகள் காணப்பட்டது. | குறைப்பாட்டிற்கான காரணத்தை தேடிப் பார்த்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒவ்வொரு பிரிவின் மூலமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காகவும் மீண்டும் BARCODE இலக்கம் பெற்றுக் கொடுப்பதற்கும் மேற்கொள்ளப்படும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏதாவது ஒரு விடயத்தின் சரியான செயலாற்றலை அளவிடுவதற்கான சரியான தரவுகள் அடிப்படையொன்று காணப்படுதல் இன்றியமையாததாக இருந்தும், நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை அளவிடுவதற்காக சரியான தரவுகள் அடிப்படையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | சரியான தரவுகள் அடிப்படையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான தரவுகள் அடிப்படையொன்றை உருவாக்கிகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சிரேஷ்ட தரத்திலான 07 பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்ற போது அவ் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு அல்லது அந்த பதவிகள் அவசிய மற்றதாயின் அவற்றை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவை அவசியமற்றதாயின் அவற்றை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய வேண்டுகோல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டாந் தரத்திலான 34 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப தரத்திலான 16 வெற்றிடங்கள் நிலவுகின்ற போதும் அவ் வெற்றிடங்களை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு தேவையான முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவை அவசியமற்றதாயின் அவற்றை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒன்றினைந்த சேவைகள் பணிப்பாளரிடம் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கான வேண்டுகோல்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. |
| (இ) | இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கை புகையிரத திணைக்களத்தில் சேவையாற்றும் 35 உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு உள்வாங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவை அவசியமற்றதாயின் அவற்றை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தேவையின் பொருட்டு உள்வாங்கப்பட்டுள்ளது. வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |